செ.வெ.எண்: 783 நாள்: 15.11.2019

# கந்தர்வக்கோட்டையில் பொது மக்களிடமிருந்து பெறப்பட்ட மனுக்களில் 343 பயனாளிகளுக்கு ரூ.1.28 கோடி மதிப்பீட்டில் நலத்திட்ட உதவிகளை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் டாக்டர்.சி.விஜயபாஸ்கர் அவர்கள் வழங்கினார்.

---

புதுக்கோட்டை மாவட்டம், கந்தர்வக்கோட்டையில் இன்று (15.11.2019) மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் டாக்டர்.சி.விஜயபாஸ்கர் அவர்கள் பொதுமக்களிடமிருந்து கோரிக்கை மனுக்களை பெற்றார். இந்நிகழ்வில் தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தலைவர் திரு.பி.கே.வைரமுத்து அவர்கள் உடனிருந்தார்.

பின்னர் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்கள் தெரிவித்ததாவது.

தமிழக அரசு ஏழை, எளிய மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தும் வகையில் எண்ணற்ற பல்வேறு நலத்திட்டங்கள் செயல்படுத்தி வருகிறது. அத்தகைய திட்டங்கள் சென்று சேருவதை உறுதி செய்யும் வகையிலும், பொதுமக்களின் பல்வேறு கோரிக்கைகளை நிறைவேற்றும் வகையிலும் புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள பொது மக்களின் இருப்பிடத்திற்கே சென்று முகாம் நடத்தி கோரிக்கை மனுக்கள் பெறப்பட்டு தகுதியுள்ள மனுக்களுக்கு உடனடி தீர்வு காணப்பட்டு வருகிறது.

இத்தகைய நிகழ்வின் மூலம் அரசை தேடி மக்கள் என்ற நிலை மாறி மக்களை தேடி அரசு என்ற நிலை ஏற்படுத்தப்பட்டுள்ளது. இதனால் தொலை தூரங்களில் உள்ள மக்களின் போக்குவரத்து அலைச்சல், காலவிரயம், பொருளாதார செலவினங்கள் முற்றிலும் தவிர்ப்பதற்கு வாய்ப்பாக அமைந்துள்ளது.

அதனடிப்படையில் இன்றைய தினம் கந்தர்வக்கோட்டை புதிய பேருந்து நிலையத்தில் பொது மக்களிடமிருந்து நேரடியாக கோரிக்கை மனுக்கள் பெறப்பட்டு, மனுக்களை பரிசீலனை செய்து, தகுதியுள்ள மனுக்களின் மீது உடனடி நடவடிக்கை மேற்கொள்ளும் வகையில் சம்மந்தப்பட்ட அலுவலர்களிடம் வழங்கப்பட்டுள்ளது.

மேலும் இம்முகாமில் வருவாய்த்துறையின் சார்பில் 309 பயனாளிகளுக்கு ரூ.82,70,500 மதிப்பீட்டிலும், வேளாண்மைத்துறையின் சார்பில் 11 பயனாளிகளுக்கு ரூ.41,000 லட்சம் மதிப்பீட்டிலும், மகளிர் திட்டத்தின் சார்பில் 20 மகளிருக்கு ரூ.20 லட்சம் மதிப்பீட்டில் அம்மா இருசக்கர வாகனங்களும், 3 மகளிர் சுய உதவிக்குழுக்களுக்கு ரூ.15 லட்சம் மதிப்பீட்டில் கடனுதவி தொகைக்கான காசோலைகளும் என மொத்தம் 343 பயனாளிகளுக்கு ரூ.1.28 கோடி மதிப்பீட்டில் பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டுள்ளது.

தமிழக அரசு பொது மக்கள் முன்னேற்றத்திற்காக தாலிக்கு தங்கம் வழங்கும் திட்டம், மகப்பேறு நிதியுதவி திட்டம், விலையில்லா கல்வி உபகரணம் வழங்கும் திட்டம், அம்மா குழந்தை நல பரிசுபெட்டகம் வழங்கும் திட்டம் போன்ற பல்வேறு மக்கள் நலத்திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. மேலும் முதியோர் உதவித் தொகை பெறும் ஆண்டு வருமானம் ரூ.50,000த்திலிருந்து ரூ.1லட்சமாக உயர்த்தி தமிழக அரசு உத்தரவிட்டுள்ளது. இதன் மூலம் தகுதியுள்ள அதிகளவிலான பயனாளிகளுக்கு முதியோர் உதவித்தொகை கிடைக்க வழிவகை ஏற்பட்டுள்ளது.

எனவே புதுக்கோட்டை மாவட்டத்தில் பொது மக்கள் தங்களின் பல்வேறு கோரிக்கைகளை நிறைவேற்ற இது போன்ற முகாம்களில் மனுக்கள் அளித்து உடனடி தீர்வு பெற்று பயன்பெற வேண்டும். இவ்வாறு மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் டாக்டர் சி.விஜயபாஸ்கர் அவர்கள் தெரிவித்தார்.

முன்னதாக மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்கள் புதுக்கோட்டை வட்டம், பெருங்களூர் கிராமத்தில் ரூ.31.50 லட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்ட புதிய கால்நடை மருந்தக கட்டடத்தை திறந்து வைத்தார்.

இந்நிகழ்வில் கந்தர்வக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் திரு.பா.ஆறுமுகம் அவர்கள், மாவட்ட வருவாய் அலுவலர் டி.சாந்தி, கால்நடை பராமரிப்பு துறை மண்டல இணை இயக்குநர் இளங்கோவன், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் காளிதாசன், புதுக்கோட்டை வருவாய் கோட்டாட்சியர் தண்டாயுதபாணி, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் ஆர்.நெடுஞ்செழியன் உள்ளிட்ட அனைத்துத்துறை அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

---

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**